# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

## Case No. CC.No. 95 of 2026

## Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சண்முக சுந்தரம்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed)**

**Dated.23.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.08.2025 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 501 ராமன் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது சிறுகளப்பூர், மேலத்தெருவில் ஒருவர் வீட்டின் அருகில் மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 9.30 மணிக்கு அங்கு சென்று பார்த்த போது சந்தேகத்தின் படியாக எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, தன் பெயர் ஜெயக்குமார் த/பெ, முத்துசாமி, மேலத்தெரு, லால்குடி திருச்சி என்றுசொன்றவரை சோதனை செய்து பார்த்த போது அவரது கையில் இருந்த கட்டைபையில் அரசு டாஸ்மார்க் மதுபானம் 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், அவரை விசாரணை செய்த போது அவர் அரசு மதுபானம் டாஸ்மார்க் கடையில் மதுபாட்டில்களை மொத்தமாக விலைக்கு வாங்கி கடை மூடிபட்டிருக்கும்

நேரத்தில் சுயலாபம் கருதி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறினார். எவ்வித அரசு உரிமமோ அனுமதியோ இன்றி விலைக்கு வாங்கி மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக காரணத்திற்காக அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 09.45 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்களை காலை 10.15 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், 501 ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு எதிரி மற்றும் தடயங்களுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 230/2025 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் 14.08.2025 ம் தேதி 11.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு பின்புறம் கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 11.30 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். அந்த அழித்தல் மகஜரில் நானும், ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.5/அ.சா.2** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.6/அ.சா.2** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**

கைப்பற்றுதல் மகஜரில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல்

மகஜர் கையால் எழுதப்பட்டிருந்தா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்தா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல காவல் நிலையத்திற்கு வந்து கையால் எழுதப்பட்ட விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டது. நான் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டு முறை கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அழித்தல் மகஜர் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் சிறப்பு உதவி ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டது. வழக்கு சொத்து யாரால் அழிக்கப்பட்டது என்றால் எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் அழித்தார். அந்த அழித்தல் மகஜரில் ஆய்வாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல ஆய்வாளரும் இருந்தார். எதிரியிடமிருந்து எந்த மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், இந்த வழக்கானது புள்ளியியல் கணக்கிற்காக போடப்பபட்ட பொய்யான வழக்கு என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.23 18:03:43 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 95 of 2026**

**Prosecution Witness : PW3**

**Name : திருமதி. தனலட்சுமி** **Taluk :**

**Father's Name :** **Calling :**

**Village :** **Age :**

**(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed)**

**Dated.23.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.08.2025ம் தேதி நானும், தலைமை காவலர் 501 ராமன், தலைமை காவலர் 1240 சண்முக சுந்தரம் ஆகியோரும் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது சிறுகளப்பூர், மேலத்தெருவில் ஒருவர் வீட்டின் அருகில் மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 9.30 மணிக்கு அங்கு சென்று பார்த்த போது சந்தேகத்தின் படியாக எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து நான் விசாரித்தபோது, தன் பெயர் ஜெயக்குமார் த/பெ, முத்துசாமி, மேலத்தெரு, லால்குடி திருச்சி என்றுசொன்றவரை சோதனை செய்து பார்த்த போது அவரது கையில் இருந்த கட்டைபையில் அரசு டாஸ்மார்க் மதுபானம் 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், அவரை விசாரணை செய்த போது அவர் அரசு மதுபானம் டாஸ்மார்க் கடையில் மதுபாட்டில்களை மொத்தமாக விலைக்கு வாங்கி கடை மூடிபட்டிருக்கும்

நேரத்தில் சுயலாபம் கருதி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறினார். எவ்வித அரசு உரிமமோ அனுமதியோ இன்றி விலைக்கு வாங்கி மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக காரணத்திற்காக அவரை நான் காலை 09.45 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் உடனிருந்த காவலர்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்களை காலை 10.15 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உடனிருந்த காவர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரி மற்றும் தடயங்களுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 230/2025 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் 14.08.2025 ம் தேதி 11.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு பின்புறம் கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Top star பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து நான் உடனிருந்த காவலர்கள் முன்னிலையில் காலை 11.30 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தேன் அந்த அழித்தல் மகஜரில் உடனிருந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

எதிரியை கைது செய்தது மற்றும் வழக்கு சொத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தது வழக்கு பதிவு செய்வதற்கு முன்னால் என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்வதற்கு முன்னால் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் எவ்வாறு குறிப்பிடப்பட்டது என்றால் ரோந்து பணிக்கு செல்லும் முன்பு அடுத்த குற்ற எண்ணை தெரிந்து கொண்டு தான் ரோந்து

பணிக்கு செல்வோம் அதன் அடிப்படையில் தான் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டது. ரோந்து பணியின் போது இரண்டு மூன்று நபர்களை கைது செய்யும் போது குற்ற எண் மாற வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் சம்பவ இடத்திலேயே வைத்து கையொப்பம் பெறப்பட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையில் எழுதிய மகஜரில் கையொப்பம் பெறப்பட்டது பின்னர் நிலையம் வந்து தட்டச்சு செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் பெறப்பட்டது. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட கையால் எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகஜரை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை காவல் ஆய்வாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆய்வாளரின் கையொப்பம் அழித்தல் மகஜரில் இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து எந்த மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், இந்த வழக்கானது புள்ளியியல் கணக்கிற்காக போடப்பபட்ட பொய்யான வழக்கு என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.23 18:03:49 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி